**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 574** **நாள்: 14.10.2026**

**மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா அவர்கள் தலைமையில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா அவர்கள் தலைமையில் இன்று (14.10.2026) ரிப்பன் கட்டட அலுவலக வளாகத்தில் உள்ள அம்மா கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் அமைச்சர் திரு.பி.வெங்கடரமணன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள், மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டி.கே.பிரபு அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள், மாண்புமிகு கைத்தறி, துணி நூல் மற்றும் காதித்துறை திரு.ம.விஜய் பாலாஜி அவர்கள், மாண்புமிகு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை திரு.க. விக்னேஷ் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.ரமேஷ் அவர்கள், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.த.லோகேஷ் தமிழ்செல்வன் அவர்கள், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.வி.சிவா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.கே.சேகர்பாபு (துறைமுகம்), திரு.எம்.அருள்பிரகாசம் (சைதாப்பேட்டை), திருமதி எம்.ஆர்.பல்லவி (திரு.வி.க.நகர்), திரு.வி.கே.ராம்குமார் (அண்ணாநகர்), திரு.கே.விஜய் தாமு (இராயபுரம்), திரு. ந.செந்தில்குமார் (திருவொற்றியூர்), திரு.க.பாலமுருகன் (அம்பத்தூர்), திரு.எம்.ஹரிஷ் (ஆலந்தூர்), திரு.ப.ரேவந்த் சரண் (மதுரவாயல்), மண்டல அளவிலான கண்காணிப்பு அலுவலர்கள்,

மாநகராட்சி, பொதுப் பணித் துறை, நீர்வளத் துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்சாரத் துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை குடிநீர் வாரியம், காவல் துறை, தேசிய பேரிடர் மீட்புப் படை, இரயில்வே, மீன்வளத் துறை, மருத்துவத் துறை, தமிழ்நாடு நுகர் பொருள் வாரியக் கழகம், ஆவின் உள்ளிட்ட பல்வேறு சேவைத் துறைகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை பணிகளை கண்காணிப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் இந்திய ஆட்சிப்பணி நிலையில் மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் நியமித்து, நாள்தோறும் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பருவமழையின் போது, அனைத்து பகுதிகளிலிருந்து வரும் மழைநீரானது கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் கோவளம் வடிநிலப் பகுதிகளில் எண்ணூர், நேப்பியர் பாலம், போர்சோர் எஸ்டேட், முட்டுக்காடு ஆகிய முக்கிய நீர் வெளியேறும் பகுதிகள் வழியாக செல்கிறது. மாநகராட்சியின் 44 கால்வாய்கள் மற்றும் நீர்வளத்துறையின் 12 கால்வாய்கள் முக்கிய வழித்தடங்களாகச் செயல்பட்டு, மழைநீர் வடிகால் நீரை ஆறுகளுக்குக் கொண்டு செல்கின்றன. இவற்றில் தூர்வாரி தங்குதடையின்றி மழைநீர் செல்வதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு கண்காணித்திட வேண்டும்.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 219 இடங்கள் மழைநீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்டுள்ளது. இங்கு 93 இடங்களில் புதிய மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டுள்ளது. 19 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. 21 இடங்களில் நீர்சேகரித்து வெளியேற்றும் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. 62 இடங்களில் மழைநீரை வெளியேற்ற மோட்டார் பம்புகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. 24 இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநகராட்சிப் பகுதிகளில் 1,669 கி.மீ. நீளத்திலான மழைநீர் வடிகால்களில் ரூ.22.46 கோடி மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 1583.62 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 1,07,963 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் முதற்கட்டமாக தூர்வாரும் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்டமாக 84,463 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மீதமுள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. 33 கால்வாய்கள் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 28 கால்வாய்களில் மேம்பாட்டு முடிக்கப்பட்டுள்ளன. டிரோன் மூலம் கால்வாய்கள் மற்றும்

சாலைகளில் நடைபெறும் பணிகளையும், மழைநீர் வடிகால் பணிகளையும் ஆய்வு செய்து, முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை சீரமைக்க ரூ.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அவசர கால நிதியாக ஒரு வார்டுக்கு ரூ.5 இலட்சம் வீதம் ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 1189 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. தாழ்வான பகுதிகளில் மழைநீரை உடனுக்குடன் வெளியேற்றுவதற்காக, அதிகத் திறன் கொண்ட மாநகராட்சியின் 676 மோட்டார் பம்புகள் மற்றும் வாடகைக்கு 100 எச்.பி. திறன் கொண்ட 150 மோட்டார் பம்புகள், டிராக்டர்களில் பொருத்தப்பட்ட 500 மோட்டார் பம்புகளும், மழைநீர் சேகரித்து வெளியேற்றும் 109 நீர் சேகரிப்புத் தொட்டிகளும், தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்பவதற்காக மாநகராட்சியின் 36 படகுகளும் மீன்வளத்துறையின் சார்பில் 275 படகுகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் அவசரகாலப் பணிகளுக்காக தற்காலிகப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 19 சுரங்கப்பாதைகளில் உள்ள கிணறுகளிலும், 30 இரயில்வே குறுக்குக் கால்வாய்களிலும் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

நீர்நிலைகளில் தூர்வாரும் பணிகளுக்காக 2 ஆம்பிபியன், 3 ஆம்பிபியன் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், 6 ரோபோடிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், 3 மினி ஆம்பிபியன், 7 சூப்பர் சக்கர் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 15 நகரும் உயரமான மின் கம்பங்கள், 15 சக்திமான மர அறுவை இயந்திரங்கள், 231 பவர்சா மர அறுவை இயந்திரங்கள், 52 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள், 5 வாகனங்களில் பொருத்தப்பட்ட மர அறுவை இயந்திரங்கள், 6 ஜே.சி.பி., 76 பாப்காட் வாகனங்கள், 86 டிப்பர் லாரிகள், டெலி ஹேண்டலர், 5 மின் ஏணிகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை தங்க வைப்பதற்காக 220 நிவாரண முகாம்கள் மற்றும் உணவு தயாரித்து வழங்குவதற்காக தேவையான உணவுப் பொருட்களின் இருப்புடன் 110 மைய சமையல் கூடங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக நகரம் முழுவதும் நிகழ்நேர மழைப்பொழிவினை கண்காணிப்பதற்காக 55 மழைமானிகளும், தொடர் கண்காணிப்பு மற்றும் சரியான நேரத்தில் வெள்ள எச்சரிக்கைகளை வழங்குவதற்காக நீர்மட்டத்தைக் கண்காணிக்கும் 40 உணர்விகள் (Sensor) பொருத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும், போக்குவரத்து ஒழுங்குமுறைக்காகவும் 17 சுரங்கப்பாதைகளிலும் தடுப்புத் தடைகள் (Boom Barriers) அமைக்கப்பட்டுள்ளன.

மழைக்காலங்களில் பொதுமக்கள் மழைத் தொடர்பான புகார்களை தெரிவிப்பதற்காக ரிப்பன் கட்டடம் தலைமையிடத்திலும், தெற்கு, மத்தியம் மற்றும் வடக்கு என மூன்று வட்டார அளவிலும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டும் மையங்கள் 24/7 மணிநேரமும்

செயல்படும் வகையில் இயங்கி வருகிறது. இதில் மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண் மையம், ட்விட்டர், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பொதுமக்களிடமிருந்து வரும் புகார்கள் பெறப்பட்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக 150 பணியாளர்களை சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை செய்வதற்காகவும், மீட்பு பணிகளுக்காகவும் 7182 தன்னார்வலர்கள், 51 ஆப்தா மித்ரா தன்னார்வலர்கள், 721 குடியிருப்பு நலச் சங்கங்கள் பதிவு செய்துள்ளனர். தன்னார்வலர்கள் பதிவு செய்வதற்காக செயலியும் பயன்பாட்டில் உள்ளது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, ஒவ்வொரு மண்டலத்திலும் கட்டுப்பாட்டு அறையினை (War Room) சிறப்பாக அமைத்து கண்காணித்து உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். மக்களை பாதுகாப்பதில் முழு கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகள் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். அனைத்து சேவைத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து போர்க்கால அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினை மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு உரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**